# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

************

**<u>ஊடக அறிக்கை</u>**

**பொருளாதார மற்றும் சமூக பேரவையின் உயர்நிலைக் குழுவில் பிரதான உரை நிகழ்த்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி, மறுசீரமைக்கப்பட ஐக்கிய நாடுகள் சபை மத்தியில் சீரமைக்கப்பட்ட பன்முகத்தன்மைக்கும் அழைப்புவிடுத்துள்ளார்.**

நியூயோர்க்கில் உள்ள ஐக்கியநாடுகள் சபையில் 2020 ஜூலை 17 வெள்ளிக்கிழமையன்று ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூகப் பேரவையின் உயர் நிலைக் குழு (ECOSOC) அமர்வில் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி காணொளிக் காட்சி மூலம் பிரதான உரை நிகழ்த்தினார்.

2021-22 காலப்பகுதிக்கான பாதுகாப்பு சபையின் நிரந்தரமல்லாத உறுப்பினர் பதவிக்கு ஜூன் 17ஆம் திகதியன்று அமோக ஆதரவுடன் இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டபின் ஐநா உறுப்பினர்களிடையே பிரதமரின் முதலாவது உரையாக இது அமைந்தது.

இந்த ஆண்டுக்கான பொருளாதார மற்றும் சமூகக் பேரவையின் உயர்நிலைக் குழு அமர்வின் தொனிப்பொருளாக “கொவிட்-19க்குப் பின்னரான பன்முகத்தன்மை: 75வது ஆண்டில் ஐநா எவ்வாறு அமைய வேண்டும்’’, என்ற தலைப்பு அமைந்திருந்தது.

ஐநா ஸ்தாபிக்கப்பட்டு 75 ஆவது ஆண்டுடன் இணைகின்ற தருணத்தில் இந்த மையப்பொருளும் ஐநா பாதுகாப்பு சபையின் உறுப்பினராக வரவிருப்பதற்கான இந்தியாவின் முன்னுரிமையையே எதிரொலிக்கிறது. தற்கால உலகத்தின் யதார்த்தங்களைப் பிரதிபலிக்கும் வகையில் கொவிட்-19க்குப் பின்னரான சீர்திருத்தப்பட்ட பன்மைத்துவத்திற்கான இந்தியாவின் அழைப்பைப் பிரதமர் இங்கு வலியுறுத்தியுள்ளார்.

ஸ்திரமான அபிவிருத்தி இலக்குகள் உட்பட ஐநாவின் அபிவிருத்திப் பணிகளிலும் பொருளாதார மற்றும் சமூக பேரவையுடனும் இந்தியாவின் நீண்டகால பிணைப்பினை பிரதமர் தனது உரையில் நினைவுகூர்ந்தார். அனைவரும் இணைவோம், அனைவரும் உயர்வோம், அனைவரையும் அரவணைப்போம் என்ற இந்தியாவின் வளர்ச்சிக் குறிக்கோள்கள் எவரும்

பின்தங்கிவிடக் கூடாது என்ற ஸ்திரமான அபிவிருத்தி இலக்குகளின் மையக் கோட்பாடுகளை எதிரொலிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மிகவும் பரந்து விரிந்த மக்கள் தொகையின் சமூக - பொருளாதார மேம்பாட்டு சுட்டெண்ணில் இந்தியாவின் வெற்றி உலகளவிலான ஸ்திரமான அபிவிருத்தி இலக்குகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதை பிரதமர் சுட்டிக்காட்டினார். ஏனைய அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் தங்களின் ஸ்திரமான அபிவிருத்தி இலக்குகளை எட்டுவதற்கு உதவி செய்ய இந்தியா உறுதிபூண்டிருப்பது பற்றியும் அவர் இங்கு குறிப்பிட்டார்.

தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் சுகாதாரம் மற்றும் சுத்தம் ஆகியவற்றை மேம்படுத்துவது, மகளிருக்கு அதிகாரமளிப்பது, அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதாரத்தை உறுதி செய்வது, அனைவருக்கும் வீடு மற்றும் ஆயுஷ்மான் பாரத் திட்டம் போன்ற முக்கியமான திட்டங்கள் மூலம் வீட்டுவசதி மற்றும் சுகாதாரவசதிகள் கிடைப்பதை விரிவுபடுத்துவது உட்பட இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி முயற்சிகள் பற்றியும் அவர் தெரிவித்திருந்தார்.

சுற்றுச்சூழல் நிலைபேறு, பல்லுயிர்ப் பாதுகாப்பு ஆகியவற்றில் இந்தியாவின் அக்கறை பற்றியும் எடுத்துரைத்த பிரதமர், சர்வதேச சூரியமின்சக்திக் கூட்டணியை நிறுவியதிலும் அனர்த்தங்களை தாங்கவல்ல அடிப்படைக் கட்டமைப்பின் கூட்டிணைவிலும் இந்தியாவின் முன்னணிப் பங்களிப்பை நினைவுகூர்ந்தார்.

பிராந்தியத்தில் முதலில் உதவுவதில் இந்தியாவின் பங்களிப்பு பற்றி பேசிய பிரதமர், பல்வேறு நாடுகளுக்கு மருந்து விநியோகத்தை உறுதிசெய்வதற்கு இந்திய அரசாலும் இந்திய மருந்து நிறுவனங்களாலும் வழங்கப்பட்ட ஆதரவையும் சார்க் நாடுகளுக்கிடையே கூட்டான ஆதரவு அணுகுமுறையை ஒருங்கிணைப்பதையும் நினைவுகூர்ந்தார்.

பொருளாதார மற்றும் சமூக பேரவையில் பிரதமர் உரைநிகழ்த்தியமை இது இரண்டாவது தடவையாகும். ஏற்கெனவே 2016 ஜனவரியில் பொருளாதார மற்றும் சமூக பேரவையின் 70ஆவது ஆண்டு நிகழ்வில் அவர் முக்கிய உரைநிகழ்த்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

****

**கொழும்பு**

**சகவருடம்** 1942 **ஆஷாட** 29

20 **ஜூலை** 2020